# ஆண்டறிக்கை

# 2018

## கணக்காய்வு சேவை ஆணைக்குழு

இல.35/ஏ
கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை
கொழும்பு 08.

தொலைபேசி : 011 -2674659/ 011 -2674660
பெக்ஸ் : 011 -2674657
மின்னஞ்சல் : secretaryasc@sltnet.lk
ascoffice@sltnet.lk

## நோக்கம்

பொது மக்களுக்கான கடப்பாட்டுக்கும்
பொறுப்புக் கூறலுக்குமான அர்ப்பணித்த
உயர்தரமான கணக்காய்வுச் சேவை

## குறிக்கோள்

தொழில்சார் நிபுணத்துவம்,தேர்ச்சி மற்றும்
புத்தாக்கத்துடன் கூடிய நல்லாட்சியை
அடிப்படையாகக் கொண்ட அரச
கணக்காய்வு சேவையினை நிறுவுவதன்
மூலம் அரச உடமைகளுக்கு
பொறுப்புக்கூறல்.

## எமது மதிப்பீடுகள்

- சுயாதீனத் தன்மை
- நடு நிலைமை
- நேர்மை
- புத்தாக்கம்
- வெளிப்படைத் தன்மை
- பொறுப்புக் கூறல்
- தொழிற் திறன்

# கணக்காய்வு சேவை ஆணைக்குழு

## தலைவர்

*திரு .எச் .எம் .காமினி விஜேசிங்ஹ*

## அங்கத்தவர்கள்

*நீதிபதி. நிஹால் சுனில் ராஜபக்ஸ*

*திரு.ஐ.காமினி அபேரத்ன*

*திரு. வீ .கந்தசாமி*

*திரு. டபிள்யு. ஏ. சோமபால பெரேரா*

# பொருளடக்கம்


| தொடர் இல | விடயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் | 1 |
| 2. | கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புகளும் | 1-2 |
| 2.1 | அரசியலமைப்பின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடமைகளும் பொறுப்புக்களும் | 1 |
| 2.2 | *2018.08.01* ஆம் திகதி தொடக்கம் நடைமுறையிலுள்ள *2018/19* ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்கள். | 2 |
| 3 | கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை - *2018* | 2 – 8 |
| 3.1 | அரசியலமைப்பின் பிரகாரமும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் மூலமும் தரப்பட்டுள்ள பொறுப்புக்களினது அடைவுகள். | 2-3 |
| 3.2 | ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட ஏனைய செயல்கள் | 4 |
| 3.3 | நிருவாக மற்றும் நிதி அடைவுகள் | 4-8 |
| 4 | பணியாளர் குழாம் | 9-11 |
| 4.1 | பணியாளர்களின் அமைவு | 9 |
| 4.2 | தள வரைபு | 10 |
| 5. | ஆணைக்குழுவின் சபை அமர்வுகள் | 11 |
| 6 | நன்றி | 11 |

# கணக்காய்வு சேவை ஆணைக்குழு

## 1. அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் XVII ஆம் அமைப்பின் 153அ(1) மற்றும் 2018 /19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 24 (1) இன் பிரகாரம் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் பிரகாரம் கணக்காய்வு தலைமை அதிபதி கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் தலைவராக செயற்ப்படுவதுடன் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக,

**அ.** பிரதி கணக்கைவாளர் அல்லது அதற்கு மேல் பதவி வகுக்கும் கணக்கைவாளர் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற இரு உத்தியோகத்தர்கள் .

**ஆ.** இலங்கை உயர்நீதி மன்றத்தின் அல்லது மேன் முறையீட்டு நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி.

**இ.** இலங்கை நிருவாக சேவையில் ஓய்வு பெற்ற முதலாம் தர உத்தியோகத்தர் ஒருவர்.

## 2. கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் கடமைகளும், பொறுப்புகளும்.

**2.1** அரசியலமைப்பின் 153 இ பிரகாரம் இலங்கை அரச கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் கடமைகளும் பின்வருமாறு அமையும்.

**I.** இலங்கை அரச கணக்காய்வு சேவைக்குரிய அங்கத்தவர்களின் நியமனம்,இடமாற்றம் பதவியுயர்வு ,ஒழுக்க விதி , மற்றும் அங்கவத்தர்களை பணி நீக்கம்.

**II.** அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகளுக்கு அமைய இலங்கை அரச கணக்காய்வு சேவைக்குறிய உறுப்பினர்களின் சேவைக்கு ஆட்சேர்ப்பு முறை நியமனம்,இடமாற்றம்,பதவி உயர்வு, ஒழுக்க நிருவாகம் மற்றும் பணி நீக்கம் தொடர்பிலான சட்ட திட்டங்களை உருவாக்கல்.

**III.** சட்டத்தினால் உருவாக்கப்பட்ட தேசிய கணக்காய்வு செயலகத்தின் வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்தல்.

**IV.** சட்டத்தினால் ஏற்ப்படுத்தப்பட்டுள்ள வேறு அதிகாரங்கள்,பொறுப்புகள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தல்.

**2.2** 2018.08.01ஆம் திகதியிலிருந்து நடைமுறையில் உள்ள 2018/19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளும், பொறுப்புக்களும்.

*I.* *ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக குழுக்களை அமைத்தல்.*

*II.* *தேசிய கணக்காய்வு செயலகத்தின் செயலாற்றுகை தரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.*

*III.* *சட்டத்தில் வழங்கப்பட்ட விடயங்களுக்கான சட்ட விதிகளை அமைத்தல்.*

## 3. கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் செயலாற்றுகை - 2018

### *3.1 அரசியலமைப்பின் மூலம் மற்றும் 2018/19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளும், பொறுப்புக்களினது அடைவுகள்.*

| தொடர் இல | அதிகாரம் | அடைவுகள் |
|---|---|---|
| 1 | *இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவி நீக்குதல்.* | *I.* *இலங்கை அரச கணக்காய்வு சேவையின் பிரமானக் குறிப்பு வரைப்பிற்கேற்ப முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகத்தின், தேசிய சம்பள ஆணைக்குழுவின் மற்றும் தாபன பணிப்பாளர் நாயகத்தின் சிபாரிசினை பெற்றுக்கொண்டு அச் சிபாரிசினை கணக்காய்வு சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு கணக்காய்வு தலைமை அதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.*<br>II. *நியமனம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள்*<br>➢ பதவி நிரந்தரப்படுத்தல் *- 05*<br>➢ பதவியிலிருந்து ஓய்வு வழங்குதல் *- 08*<br>➢ கேட்டு விளகிக்கொள்ளல் *- 01*<br>*III.* பதவியுவர்வு<br>*உதவி கணக்காயிவாளர் பதவிக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டமை. - 11* |

| | | |
|---|---|---|
| 2 | இலங்கை அரச கணக்காய்வு சேவையைச் சேர்ந்த உறுப்பினர்களை நியமித்தல், பதவியுயர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் அவர்களைப் பதவி நீக்குதல் சம்பந்தமான சட்ட திட்டங்களை உருவாக்குதல். | கணக்காய்வு சேவை ஆணைக்குழு - நடைமுறை விதிமுறைக்கான மதிப்பாய்வுகளையும் அவதானங்களையும் பெறுதல். |
| 3 | தேசிய கணக்காய்வு செயலகத்தின் வருடாந்த மதிப்பீட்டை தயார் செய்தல். | 2019 ஆம் ஆண்டின் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை மதிப்பாய்வு செய்து அதனை கௌரவ சபாநாயகர் அவர்களுக்கு அனுப்புதல். |
| 4 | இலங்கை கணக்காய்வு நியமங்களில் நிறைவேற்றுகைக் கணக்காய்வுகள், சூழல் கணக்காய்வுகள், தொழில் நுட்பக்கணக்காய்வுகள் மற்றும் வேறு விசேட கணக்காய்வுகளுக்காகக் கணக்காய்வு நியமங்கள் குறித்துரைக்கப்படாதுவிடத்து அதற்குதேவையான தர நிலைகளை உருவாக்குதல். | இலங்கை அரச துறையின் கணக்காய்வு தரநிலை தொடர்பாக தலைவரினால் சமர்ப்பித்த வரைபில் உள்ளடங்கிய விடயங்களை ஆய்வு செய்ய குழு ஒன்றினை நியமித்து அதன் பரிந்துரைகளை ஆணைக்குழுவிற்கு முன் வைப்பதற்காக கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அறிவித்தல். |
| 5 | ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு உதவியாக குழுக்களை நியமித்தல். | இலங்கை அரச கணக்காய்வு சேவையை நிறுவுவதற்குத் தேவையான சேவை பிரமாணக் குறிப்பை வரைவதற்காக ஐந்து உறுப்பினர்கள் அடங்கிய குழுவை நியமனம் செய்தல். |

### 3.2 ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய நடவடிக்கைகள்.

- ஆணைக்குழுவிற்காக இணையத்தளம் ஒன்றினை 2018.01.26 ஆம் திகதி ஆரம்பித்து வைத்தமை.

- இந்திய கணக்காய்வு திணைக்களத்துடன் இணைந்து அறிவையும்,அனுபவத்தினையும் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் இந்திய நாட்டுக்கு ஆய்வு பயணமொன்றினை 2018.05.02 ஆம் திகதி தொடக்கம் 2018.05.10 திகதி வரை கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் மேற்கொண்டிருந்தனர் .

- கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் 03 சபை அமர்வுகள் நடை பெற்றுள்ளன.

### 3.3 நிருவாக, நிதி மற்றும் ஏனைய நடவடிக்கைகள்

(அ) கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் மொத்த நிருவாகம், மனித வள முகாமை மற்றும் தகவல் முகாமை சம்பந்தமான முழுப்பொறுப்பும் நிருவாக பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் நிதி விவகாரங்கள் மற்றும் நிலையான சொத்து அறிக்கை தொடர்பான அனைத்து விடயங்களும் கணக்குப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.


(ஆ) தேசிய கணக்காய்வு காரியாலயத்தில் பனி புரியும் கணக்காய்வு அத்தியட்சகர் சேவை மற்றும் கணக்காய்வு அல்லாத சேவைக்குரிய ஊழியர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்க விதிமுறைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின், பதவி உயர்வுகள் மற்றும் ஒழுக்கக் காட்டுப்பாட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது.


(இ) 2018 ஆம் ஆண்டு மீண்டெழும் செலவுக்காக 47.2 மில்லியன் ரூபாவும் மூலதனச் செலவு க்காக 2.8 மில்லியன் ரூபாவும் மொத்தமாக 47,2 மில்லியன் ரூபா வருடாந்த ஒதுக்கமாக திறைசேரியினால் ஒதுக்கப்பட்டிருந்தது.


(ஈ) 2018 ஆம் ஆண்டின் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் ஒதுக்கீடுகள், செலவுகள் மற்றும் சேமிப்புகளின் சுருக்கம் பின்வருமாறு.

| | ஒதுக்கம் ரூபா (2018 வருடாந்த ஒதுக்கத்தின் படி ) | மேலதிக ஒதுக்கம் - 2018 ரூபா. | நி .பி .66 இன் கீழ் மாற்றுதல் - 2018 ரூபா . | அனுமதிக்கப் பட்ட மொத்த ஒதுக்கம் 2018 ரூபா . | மொத்தச் செலவு (2018.01.01- 2018.12.31) ரூபா . | மீதி (2018.12.31 திகதியன்று ) ரூபா . |
|---|---|---|---|---|---|---|
| மீண்டெழும் | 44,322,000.00 | 1,000,000.00 | (925,000.00) | 44,397,000.00 | 37,432,201.85 | 6,964,798.15 |
| மூலதன | 1,885,000.00 | - | 925,000.00 | 2,810,000.00 | 2,507,372.31 | 302,627.69 |
| **மொத்தம்** | **46,207,000.00** | **1,000,000.00** | **-** | **47,207,000.00** | **39,939,574.16** | **7,267,425.84** |

## கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் நிதி சாராம்சம் (2018)



# 2018 ஆம் வருடத்திற்கான நிதி அறிக்கை

| கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு | | | | | |
|---|---|---|---|---|---|
| பொருள் | விபரம் | வருடாந்த ஒதுக்கீடு - 2018 ரூபா. | மேலதிக ஒதுக்கீடு - 2018 ரூபா. | நி .க 66 மாற்றுதல் 2018 ரூபா. | செலவு 2018-01-01 இலிருந்து தொடக்கம் 2018-12-31 வரை ரூபா. |
| 23-01-01 | *மீண்டெழும் செலவு* | **44,322,000.00** | - | - | **37,432,201.85** |
| | **தனிப்பட்ட வேதனங்கள்** | **22,000,000.00** | | | **16,328,486.44** |
| 1001 | சம்பளங்களும் வேதனங்களும் | 15,000,000.00 | | (3,936,431.70) | 7,605,773.75 |
| 1002 | மேலதிக நேரக்கொடுப்பனவு | 1,000,000.00 | | | 103,581.41 |
| 1003 | வேறு கொடுப்பனவுகள் | 6,000,000.00 | | 2,632,000.00 | 8,619,131.28 |
| | **போக்குவரத்துச்செலவு** | **1,100,000.00** | | | **2,194,100.50** |
| 1101 | உள்நாட்டு | 100,000.00 | | | 7,000.00 |
| 1102 | வெளிநாட்டு | 1,000,000.00 | 1,000,000.00 | 200,000.00 | 2,187,100.50 |
| | **வளங்கள்** | **1,972,000.00** | | | **1,709,354.88** |
| 1201 | காகிதாதிகள் மற்றும் காரியால | 1,000,000.00 | | 101,889.30 | 1,101,889.30 |
| 1202 | எரிபொருள் | 700,000.00 | | | 432,938.46 |
| 1203 | உணவு மற்றும் சீருடை | 272,000.00 | | | 174,527.12 |
| | **பராமரிப்புச் செலவு** | **900,000.00** | | | **340,895.33** |
| 1301 | வாகன பராமரிப்புச் செலவு | 700,000.00 | | (200,000.00) | 303,680.18 |
| 1302 | இயந்திர பராமரிப்புச் செலவு | 200,000.00 | | | 37,215.15 |
| | **சேவை** | **16,950,000.00** | | | **16,567,168.13** |
| 1401 | போக்குவருத்துச் செலவு | 1,200,000.00 | | 328,750.00 | 1,527,943.55 |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் | 1,500,000.00 | | | 776,766.69 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் செலவு | 720,000.00 | | | 301,242.55 |
| 1404 | வாடகை மற்றும் வரி | 10,530,000.00 | | 975,681.70 | 11,505,681.70 |
| 1409 | வேறு செலவுகள் | 3,000,000.00 | | (101,889.30) | 2,455,533.64 |
| | **மாற்றுதல்** | **1,400,000.00** | | | **292,196.57** |
| 1505 | சந்தா மற்றும் பங்களிப்பு | 100,000.00 | | | - |
| 1506 | அரச ஊழியர்களின் அசையா சொத்துக் கடன் வட்டி | 1,300,000.00 | | (925,000.00) | 292,196.57 |
| 23-01-01 | *மூலதனச் செலவு* | **1,885,000.00** | - | - | **2,507,372.31** |
| | **மூலதன்ச் சொத்துக்களை மேம்படுத்தல்** | **400,000.00** | | | **185,201.81** |
| 2001 | கட்டிடம் மற்றும் நிருமானம் | 200,000.00 | | | 150,201.81 |
| 2003 | வாகனம் | 200,000.00 | | | 35,000.00 |
| | **மூலதனச்சொத்துக்களை கையகப்படுத்தல்** | **1,000,000.00** | | | **1,924,420.50** |
| 2102 | தளபாடம் மற்றும் காரியாலய உபகரணங்கள் | 1,000,000.00 | | 925,000.00 | 1,924,420.50 |
| | **மனித வள அபிவிருத்தி** | **485,000.00** | | | **397,750.00** |
| 2401 | ஊழியர்களின் பயிற்சி | 485,000.00 | | | 397,750.00 |
| | **மொத்தம்** | **46,207,000.00** | - | - | **39,939,574.16** |

*(உ)* கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் ஊழியர்களின் அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்கில் 2018 ஆம் ஆண்டினுள் ஊழியர்களை பல்வேறுபட்ட பயிற்சி நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

| இல | **பயிற்சியின் பெயர்** | **பதவி** | **அலுவலர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | காரியாலய முகாமைத்துவம் சம்பந்தமான டிப்ளோமா பாட நெறி . | நிருவாக உத்த்தியோகத்தர் . | 01 |
| 2. | தொழில் முறை சம்பந்தமான ஆங்கில மொழி சான்றிதழ் கற்கை . | அரச முகாமைத்துவ உதவியாளர். | 02 |
| 3. | வாகன முகாமைத்துவம் . | அரச முகாமைத்துவ உதவியாளர். | 01 |
| 4. | முகாமைத்துவ உதவியாளர்களுக்கான கணணி செயலமர்வு . | அரச முகாமைத்துவ உதவியாளர் | 01 |
| 5. | காரியாலய கடிதம் எழுதுவது எப்படி தொடர்பிலான செயலமர்வு . | அரச முகாமைத்துவ உதவியாளர். | 01 |
| 6. | சாரதிகளின் கடமைகளும் மற்றும் பொறுப்புக்களும். | சாரதி | 01 |
| 7. | ஜூனியர் நிருவாகிகளுக்கான ஆங்கில டிப்ளோமா பாட நெறி ( அரச முகாமைத்துவ உதவியாளர் ,அபிவிருத்தி உத்தியோகத்தர் ) | அரச முகாமைத்துவ உதவியாளர். | 01 |
| 8. | அரச கொள்முதல் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் சம்பந்தமான உயர் தேசிய டிப்ளோமா . | கணக்காளர் . | 01 |
| 9. | இலங்கை கணக்காளர் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான திறனை வளர்ப்பதற்கான பயிற்சித் திட்டம் . | கணக்காளர் . | 01 |
| 10. | புதிய சிகாஸ் செயலமர்வு . | அரச முகாமைத்துவ உதவியாளர். | 01 |
| 11. | வரவு செலவுத் திட்ட கண்காணிப்பு பயிற்சி நெறி . | கணக்காளர் ,<br>அரச முகாமைத்துவ உதவியாளர். | 01<br>02 |
| 12 | நிலையான கொள்முதல் சம்பந்தமான வேலைகள் தொடர்பிலான பயிற்சி நெறி | கணக்காளர் | 01 |
| 13. | கூகள் உடன் டிஜிட்டல் மயப்படுத்துவது எவ்வாறு என்பது சம்பந்தமான செயலமர்வு . | தகவல் தொழில் நுட்ப அலுவலர். | 01 |


| | | | |
|---|---|---|---|
| 14 | கேள்வி மனுக்கோரல் மற்றும் ஒப்பந்த வேலை சம்பந்தமான செயலமர்வு. | அரச முகாமைத்துவ உதவியாளர். | 01 |
| 15 | பிரத்தயேக கோவை முகாமைத்துவம் | அரச முகாமைத்துவ உதவியாளர். | 01 |
| 16 | அரச கணக்காய்வு தரம் மற்றும் கணக்காய்வு வினவலுக்கு எவ்வாறு பதில் தயாரிப்பது சம்பந்தமான செயலமர்வு | நிருவாக உத்த்தியோகத்தர் . | 01 |
| 17 | ஊழியர்களினது செயற்திறன் ஊக்குவிப்பு செயலமர்வு. | அணைத்தது ஊழியர்களும் | 24 |
| 18 | பிரதான உள்ளக கணக்காய்வாளர்கள் / உள்ளக கணக்காய்வாளர்களுக்கான பயிற்சி. | கணக்காளர் , | 01 |

## 4. பணியாளர் குழாம்

*4.1* கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 43 ஆகும். 2018.12.31ஆம் திகதியன்று கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் பணியாளர் குழாம் கீழ் வரும் வகையில் அமைந்துள்ளது.

| பதவி மட்டம் | பதவி | சேவை | தரம் / வகுப்பு | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | சேவையில் உள்ள எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | செயலாளர் | | | 01 | 01 | 0 |
| | மேலதிகச் செயலாளர். | இலங்கை நிருவாக சேவை. | விஷேட | 01 | 0 | 01 |
| | சிரேஷ்ட உதவிச் செயலாளர் . | இலங்கை நிருவாக சேவை . | I | 01 | 01 | 0 |
| | பணிப்பாளர் | தீவு தழுவிய சேவை. | I | 01 | 0 | 01 |
| | உதவிச் செயலாளர் | இலங்கை நிருவாக சேவை. | III /II | 02 | 0 | 02 |
| | உதவிச் செயலாளர் | தீவு தழுவிய சேவை. | III /II | 01 | 0 | 01 |
| | கணக்காய்வு அத்தியட்சகர். | இலங்கை கணக்காய்வுச் சேவை. | III /II | 01 | 0 | 01 |
| | கணக்காளர் . | இலங்கை கணக்காளர் சேவை . | III /II | 01 | 01 | 0 |
| | சட்ட அலுவலர். | துறை சார் | III /II | 01 | 0 | 01 |
| மூன்றாம் நிலை | நிருவாக உத்தியோகத்தர். | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை . | உயர் வகுப்பு | 01 | 01 | 0 |
| | மொழி பெயர்ப்பாளர் . | மொழி பெயர்ப்பாளர் சேவை . | II/ I | 03 | 0 | 03 |
| | தகவல் தொழில் நுட்ப அலுவலர். | இலங்கை தகவல் தொழில் நுட்பச் சேவை . | 2 தரம் II/ I | 01 | 01 | 0 |
| இரண்டாம் நிலை | தகவல் தொழில் நுட்ப உதவியாளர் . | இலங்கை தகவல் தொழில் நுட்பச் சேவை. | 3 தரம் III /II/ I | 01 | 0 | 01 |
| | அரச முகாமைத்துவ உதவியாளர். | அரச முகாமைத்துவ சேவை. | III /II/ I | 15 | 11 | 04 |
| ஆரம்ப நிலை | சாரதி | சாரதி சேவை. | III/II/ I | 06 | 04 | 02 |
| | காரியாலய உதவியாளர் . | காரியாலய உதவியாளர் சேவை. | III/II/ I | 06 | 05 | 01 |
| மொத்தம் | | | | 43 | 25 | 18 |

## 4.2 தள வரைபடம்


கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அமைப்பு அட்டவனை
தலைவர் அங்கத்தவர்கள்
செயலாளர்
மேலதிக செயலாளர்
சிரேஷ்ட்ட உ .செயலாளர்
பணிப்பாளர்
உதவிச் செயலாளர்
உதவிச் செயலாளர்
கணக்காளர்
சட்ட அலுவலர்
உதவிப் பணிப்பாளர்
கணக்காய்வு அத்தியட்சகர்
நிருவாக உத்தியோகத்தர்
மொழி பெயர்ப்பாளர்
தகவல் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தகவல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர
அரச முகாமைத்துவ உதவியாளர்
அரச முகாமைத்துவ உதவியாளர்
அரச முகாமைத்துவ உதவியாளர்
அரச முகாமைத்துவ உதவியாளர்
ஏனைய உத்தியோகத்தர்கள்
காரியாலய உதவியாளர் / சாரதி

## 5. ஆணைக்குழுவின் அமர்வுகள்

காலப்பகுதியினுள் கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் மொத்தமாக (17) அமர்வுகள் இடம் பெற்றிருக்கிறது. மேலதிகமாக இலங்கை அரச கணக்காய்வு சேவையை உருவாக்குவதற்காக யாப்பொன்றை வரைவதற்குத் தேவையான குழு ஒன்றினை அமைப்பதற்காக விசேட ஆணைக்குழு அமர்வொன்று நடாத்தப்பட்டுள்ளது .

## 6. நன்றி

இவ்வாண்டு கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் சகல நடவடிக்கைகளையும் சீராக மேற்கொள்ள உதவிய ஜனாதிபதி செயலகத்தின், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின்,அரச நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின், நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின், கணக்காய்வாளர் தலமை அதிபதி திணைக்களத்தின் மற்றும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அரசியலமைப்பின் 153 ஏ பிரிவின் படி கணக்காய்வு சேவை ஆணைக்குழு 2018 ஆம் ஆண்டிற்காக இந்த ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கின்றது.

| | |
|---|---|
| திரு .எச் .எம். காமினி விஜேசிங்ஹ | தலைவர் |
| நீதிபதி. திரு. நிஹால் சுனில் ராஜபக்ஸ | அங்கத்தவர் |
| திரு.ஐ .காமினி அபேரத்ன | அங்கத்தவர் |
| திரு.வீ. கந்தசாமி | அங்கத்தவர் |
| திரு.டபிள்யு.ஏ. சோமபால பெரேரா | அங்கத்தவர் |